Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 198 | உள்ளூர் - 17.07.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 198 | வெளியூர் - 18.07.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



வாழ்க்கையில் வெற்றியைத் தரும் 6 லக்னங்கள்!

ரயில்வே – காலிப்பணியிடங்கள்: 119!

கடலில் மூழ்கிய படகு: 500 பேர் பலி?

மதுப்பிரியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி!


## நாட்டின் முதல் ஹைட்ரஜன் தொடக்கம்!

சண்டிகர், ஜூலை. 17–

இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயிலை பிரதமர் மோடி ஜிந்த் ரயில் நிலையத்தில்இன்று ( ஜூலை 17 ல் )கொடியசைத்து தொடங்கி வைத்தார்

இந்த ரயில் சென்னை பெரம்பூர் ICF தொழிற்சாலையில் முழுமையாக வடிவமைத்து தயாரிக்கப்பட்டது. ஹரியானா மாநிலம் ஜிந்த் சோனிபட் (89 கி.மீ.) வழித்தடத்தில் தினமும் இருவழியிலும் இயக்கப்படும்.




2 ஓட்டுநர் பெட்டிகள் + 8 பயணிகள் பெட்டிகள் கொண்ட இந்த ரயிலில் 2,600–க்கும் மேற்பட்டோர் பயணிக்க முடியும்.1200 கிலோவாட் ஹைட்ரஜன் எரிபொருள் தொழில்நுட்பம் மற்றும் பேட்டரி ரீசார்ஜ் அமைப்புடன் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பயணக் கட்டணம் ரூ.5 முதல் ரூ.25 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுடன் சேர்த்து சென்னை பூங்கா, சின்னசேலம், குன்னூர் உள்ளிட்ட ரயில் நிலையங்கள் திறப்பு மற்றும் ரூ.14,700 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார்

மேலும்அரியான மற்றும் பஞ்சாப் மாநிலத்துக்கு பிரதமர் மோடி இன்று பயணம் மேற்கொண்டார்.இந்த பயணத்தின்போது இரு மாநிலங்களிலும் சுமார் ரூ. 26000 கோடிக்கும் அதிக மதிப்பிலான பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்கிறார். மேலும் பல புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

## மழைக்கால கூட்டத்தொடர்: டெல்லியில் அரசியல் பரபரப்பு..!

புதுடெல்லி, ஜூலை. 17–

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்க உள்ள நிலையில், பிரதமர் இல்லத்தில் அமித் ஷா உள்ளிட்ட பாஜக மூத்த தலைவர்கள் அவசர ஆலோசனை நடத்தினர். அமைச்சரவை மாற்றம், கூட்டணி வியூகம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. மறுபுறம், சோனியா காந்தி இல்லத்தில் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட காங்கிரஸ்




தலைவர்களும் தனியாக ஆலோசனை நடத்தினர். நீட் வினாத்தாள் கசிவு, எரிபொருள் விலை உயர்வு, இந்தியாஅமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட விவகாரங்களை மையமாக வைத்து மத்திய அரசை எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் எதிர்கொள்ள திட்டமிட்டுள்ளன.

இதற்கிடையே, ஜூலை 21–ல் NDA கூட்டமும், INDIA கூட்டணி ஆலோசனையும் நடைபெறவுள்ள நிலையில், கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மத்திய அரசு கூட்டியுள்ளது.

## 3 ஆண்டுகளில் உலகத் தர சர்வதேச விளையாட்டு அரங்கம்: அமைச்சர் ஆதவ் அர்ஜுனா!

சென்னை, ஜூலை. 17–

தமிழகத்தில் உலகத் தரம் வாய்ந்த சர்வதேச விளையாட்டு அரங்கத்தை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பும், நிதி ஒதுக்கீடும் அடுத்த 2026–27 பட்ஜெட்டில் வெளியாகும் என்றார். முதலமைச்சர் விஜய், திட்டத்துக்கான மூலதனச் செலவில் (CAPEX) தயக்கம்



வேண்டாம் என உத்தரவிட்டுள்ளதாகவும், 3 ஆண்டுகளுக்குள் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டுக்கு வரும் என்றும் கூறினார்.

மேலும், தமிழ்நாட்டை சர்வதேச விளையாட்டு மையமாக (Sports Hub) மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். கோயம்புத்தூரில் ₹500 கோடியில் சர்வதேச கிரிக்கெட் மைதானத் திட்டம் மறுஆய்வில் இருப்பதுடன், செம்மஞ்சேரியில் Global Sports City மற்றும் தாம்பரத்தில் புதிய விளையாட்டு அரங்குகளும் உருவாகி வருகின்றன.

## சுய கணக்கெடுப்பு தொடங்கியது...!




சென்னை, ஜூலை. 17–

தமிழகம் முழுவதும் மக்கள் தொகை 'சுய கணக்கெடுப்பு' இன்று (ஜூலை 17) தொடங்கியது. பொதுமக்கள் தங்களது விவரங்களை ஜூலை 31 வரை இணையதளம் மூலம் தாங்களே பதிவு செய்யலாம். இதையடுத்து ஆகஸ்ட் 1 முதல் 30 வரை கணக்கெடுப்பாளர்கள் வீடு தோறும் சென்று நேரடி கணக்கெடுப்பை மேற்கொள்வார்கள். சுய கணக்கெடுப்பு வசதி அறிமுகமாகியிருப்பது இந்த கணக்கெடுப்பின் முக்கிய அம்சமாகும்.

## "நகராட்சியின் கீழ் 50 குறுகிய கால டெண்டர் ரத்து"

சென்னை, ஜூலை. 17–

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் பல நகராட்சிகளில் வெளியிடப்பட்ட 50 குறுகிய கால டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டன.கோத்தகிரி நகராட்சியில் 3 டெண்டர்கள் ரத்து, செங்கம் நகராட்சியில் 2 டெண்டர்கள் ரத்து, உடுமலைப்பேட்டைநகராட்சியில் 30 டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது




மிகக் குறுகிய கால அவகாசத்தில் டெண்டர்கள் கோரப்பட்டதால், போதிய போட்டி மற்றும் வெளிப்படைத்தன்மை பாதிக்கப்படலாம் என்ற காரணத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

டெண்டர் நடைமுறைகள் அரசின் கொள்முதல் விதிமுறைகளுக்கு ஏற்ப உள்ளதா என்பதை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். ஆய்வில் கண்டறியப்பட்ட குறைபாடுகளைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டன. தேவையான பணிகள் தாமதமடையாமல் இருக்க, புதிய டெண்டர்கள் விரைவில் உரிய கால அவகாசத்துடன் மீண்டும் வெளியிடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

போட்டித்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் அனைத்து தகுதியான ஒப்பந்ததாரர்களுக்கும் சம வாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

## ஹார்முஸ் பாதைக்கு 'பை'..!

# இந்தியா புதிய ரூட்..! யு.ஏ.இ. வழி எண்ணெய்..!

## விலை உயர்வு அபாயம்..!!




புதுடெல்லி, ஜூலை. 17–

ஈரான்அமெரிக்கா போர் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நெருக்கடியால், இந்தியா மாற்று கடல் வழிகளை பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

இதன்படி, ஐக்கிய அரபு அமீரகத்தின் ஃபுஜைரா மற்றும் கோர் ஃபக்கான் துறைமுகங்கள் வழியாகவும், ஹப்ஷான் ஃபுஜைரா குழாய் பாதை மூலமாகவும் இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகின்றன. ஓமனின் சோஹர் துறைமுகமும் மாற்று எரிசக்தி மையமாக பயன்படுத்தப்படுகிறது. ஈரான் போருக்கு முன்பு இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியில் சுமார் 60% மற்றும் எல்பிஜி இறக்குமதியில் 90% ஹார்முஸ் ஜலசந்தி வழியாக வந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது அந்தப் பகுதியில் போர் பதற்றம் அதிகரித்துள்ளதால் மாற்று வழிகள் தேடப்பட்டுள்ளன.

இதற்கிடையில், உலக சந்தையில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 85.52 டாலராக உயர்ந்துள்ளது. போர் மேலும் தீவிரமடைந்தால் இந்தியாவில் பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையும் மீண்டும் உயரக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

## தியாகிகள் தினத்தையொட்டி வீரவணக்கங்கள்- முதலமைச்சர் விஜய்!

சென்னை, ஜூலை. 17–

இந்திய விடுதலைக்கும், மக்களின் உரிமை வாழ்விற்கும் தங்களது இன்னுயிரை ஈந்த தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி செண்பகராமன் ஆகியோருக்கு தியாகிகள் தினத்தை முன்னிட்டு எனது வீரவணக்கங்கள் என்று முதலமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார்.

தியாகிகள் தினத்தை முன்னிட்டு முதலமைச்சர் விஜய் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

இந்திய விடுதலைக்கும், மக்களின் உரிமை வாழ்விற்கும் தங்களது இன்னுயிரை ஈந்த தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி செண்பகராமன் ஆகியோருக்கு தியாகிகள் தினத்தை முன்னிட்டு எனது வீரவணக்கங்கள்.

ஆங்கிலேயரின் அதிகாரச் செருக்கை வேரறுக்கும் வகையில், சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் பறந்த பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு, இந்திய



மூவர்ணக் கொடியை ஏற்றிய மாவீரர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகத் தொடர் உண்ணாவிரதமிருந்து இன்னுயிரை ஈந்த தியாகி சங்கரலிங்கனார், 'ஜெய் ஹிந்த்' என்ற முழக்கத்தை சுதந்திரப் போராட்டத்திற்கு அளித்து, இந்திய விடுதலைக்காக சர்வதேச ஆதரவைத் திரட்டிய, வீரத்தியாகி செண்பகராமன் ஆகியோரின் அயராத உழைப்பும் தன்னலமற்ற தியாகமும் என்றென்றும் போற்றத்தக்கது. இத்தகைய தியாகிகளின் உயரிய பண்புகளை வாழ்வியல் நெறியாக ஏற்று, மனிதநேயமும் நாட்டுப்பற்றும் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கிடுவோம்! என்று கூறியுள்ளார்.

## மேகதாது அணைக்கு எதிராக திமுக எம்.பி.க்கள் குரலெழுப்புவார்கள் - மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஜூலை. 17–

திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் தலைமையில் அக்கட்சியின் எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டம் ஆன்லைன் வாயிலாக நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மேகதாது அணை, நடைபெறவுள்ள நாடாளுமன்ற கூட்டத்தொடரில் மத்திய அரசு மீண்டும் தாக்கல் செய்யவுள்ளதாக கூறப்படும் மறுவரையறை மசோதா உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தைத்



தொடர்ந்து மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் ஒரு பதிவிட்டுள்ளார். அதில்,

"மேகதாது அணை கட்டும் முயற்சிகளுக்கு எதிராகவும், காவிரியில் தமிழ்நாட்டுக்குள்ள நியாயமான உரிமையைக் காக்கவும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரத்துக் குரலெழுப்புவார்கள்.

ஒன்றிய அரசு கொண்டு வரும் எந்தப் புதிய சட்டமாக இருந்தாலும் மாநில உரிமைகளையும், அரசியலமைப்புச் சட்டத்தினையும் பாதுகாத்திடும் வகையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு இருக்கும்.

தமிழ்நாட்டு மக்களின் மனசாட்சியாய் ஒவ்வொரு திமுக நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயல்படுவார்கள்!" என தெரிவித்துள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 17.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 01-ம் தேதி

# MSME வளர்ச்சி: தமிழக பொருளாதாரத்தின் புதிய திசை!



தமிழ்நாட்டு முதல்வர் விஜய் தலைமையில் நடந்த 2வது அமைச்சரவை கூட்டத்தில் 2026–27ஆம் நிதியாண்டுக்கான முழு பட்ஜெட் அறிக்கையை தாக்கல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது உடன் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) முக்கிய பங்கு வகிக்கின்றன. வேலைவாய்ப்பு உருவாக்கம், ஏற்றுமதி, உள்ளூர் உற்பத்தி, கிராமப்புற பொருளாதார வளர்ச்சி என பல துறைகளுக்கு இந்த நிறுவனங்களே முதுகெலும்பாக உள்ளன. இந்நிலையில், தமிழக அரசு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதுடன் மட்டுமல்லாமல், மாநிலத்தின் MSME துறையை வலுப்படுத்தும் நோக்கில் புதிய கொள்கைகளை வகுக்க ஆலோசகர்களை நியமிக்க முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

கடந்த சில ஆண்டுகளாக உலகளாவிய பொருளாதார மந்தநிலை, உற்பத்தி செலவு உயர்வு, மின்சார சவால்கள், மூலப்பொருட்களின் விலை உயர்வு, சந்தை போட்டி போன்ற காரணங்களால் சிறு தொழில்கள் கடும் நெருக்கடியை சந்தித்து வருகின்றன. பல தொழில் நிறுவனங்கள் விரிவாக்கத் திட்டங்களை ஒத்திவைத்துள்ளன; சில நிறுவனங்கள் உற்பத்தியைக் குறைத்துக் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில், MSME துறைக்கு தனிப்பட்ட கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது.

ஆனால், ஆலோசகர்களை நியமிப்பது மட்டுமே தீர்வாக அமையாது. அவர்கள் அளிக்கும் பரிந்துரைகள் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும். தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் எளிமையாக்கப்பட வேண்டும். வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்க வேண்டும். மின் விநியோகம், தொழில் பூங்காக்கள், ஏற்றுமதி வசதிகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆகியவை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தப்பட வேண்டும். உணவு பதப்படுத்துதல், மின்னணு உற்பத்தி, ஜவுளி, தோல், ஆட்டோமொபைல், மின்சார வாகனங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் நீண்டகால கொள்கைகள் அவசியம்.

தமிழ்நாடு ஏற்கனவே இந்தியாவில் அதிக MSME நிறுவனங்களைக் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. இந்த பலத்தை உலகத் தரத்துக்கு உயர்த்துவதற்கான சரியான நேரத்தில் இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த கொள்கை மாற்றம் வெறும் அறிவிப்பாக இல்லாமல், செயல்திறன் மிக்க திட்டங்களாக மாறினால் மட்டுமே அதன் பலன் தொழில் முனைவோர்களை சென்றடையும், சிறு தொழில்கள் வலுவடைந்தால்தான் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும்; வேலைவாய்ப்பு அதிகரித்தால்தான் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியும் வேகமெடுக்கும். எனவே, MSME துறையை வலுப்படுத்தும் இந்த முயற்சி தொடர்ச்சியான செயலாக்கத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.



தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், புலிகுத்தி ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்திய கணக்கெடுப்பு–2027 குறித்த பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்த புகைப்படம்.

# ரகுராம் ராஜனுக்கு அமெரிக்க மத்திய வங்கியில் முக்கிய பொறுப்பு!



புதுடெல்லி, ஜூலை. 17–

அமெரிக்காவின் மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வ், தனது பணவியல் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை மறுஆய்வு செய்வதற்காக ஐந்து உயர்மட்ட பணிக் குழுக்களை அமைத்துள்ளது. இதில், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், பொருளாதார நிபுணர் ராஜ் செட்டி மற்றும் மைக்ரோ சாஃப்ட் நிர்வாகி ஆஷா சர்மாஆகிய மூன்று இந்திய வம்சாவளியினர் முக்கிய பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ரகுராம் ராஜன், Balance Sheet Policy தொடர்பான பணிக்கு குழுவில் இடம்பெற்றுள்ளார். இந்தக் குழு, ஃபெடரல் ரிசர்வின் சொத்து இருப்பு, அதன் பயன்பாடு மற்றும் கொள்கைகளின் தாக்கம் குறித்து ஆய்வு செய்ய உள்ளது. ராஜ் செட்டி, தரவு சார்ந்த கொள்கை ஆய்வுக் குழுவில் இடம் பெற்றுள்ளார்.

இந்த நியமனங்கள், சர்வதேச பொருளாதார கொள்கை வடிவமைப்பில் இந்திய வம்சாவளி நிபுணர்களின் செல்வாக்கை மேலும் உயர்த்தியுள்ளதுடன், இந்தியாவுக்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாகக் கருதப்படுகிறது.

# கடலில் மூழ்கிய படகு: 500 பேர் பலி?




நேப்பிடோ, ஜூலை. 17–

மியான்மரில் இருந்து பாதுகாப்பு தேடி படகுகள் மூலம் தப்பிச் சென்ற ரோஹிங்கியா அகதிகள் பயணித்த இரண்டு படகுகள் கடலில் மூழ்கியதில் 500–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் அகதிகள் முகமை (UNHCR) மற்றும் சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (IOM) கவலை தெரிவித்துள்ளன. கடந்த ஜூன் மாத இறுதியில் சுமார் 250 பேருடன் புறப்பட்ட முதல் படகு தொடர்பை இழந்ததாகவும், ஜூலை 8–ஆம் தேதி சுமார் 280 பேருடன் சென்ற மற்றொரு படகு மியான்மர் கடற்கரைக்கு அருகே மூழ்கியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மோசமான வானிலை மற்றும் கடல் சீற்றம் காரணமாக மீட்புப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மியான்மரில் நீடித்து வரும் உள்நாட்டு மோதல்கள் மற்றும் வங்கதேச அகதி முகாம்களின் மோசமான சூழல் காரணமாக, ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா அகதிகள் ஆண்டுதோறும் உயிரைப் பணயம் வைத்து கடல் வழியாக மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்ல முயல்கின்றனர். இந்த துயரச் சம்பவம் தொடர்பாக அதிகாரப்பூர்வ உயிரிழப்பு எண்ணிக்கை இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்றாலும், மிகப்பெரிய மனிதாபிமான பேரிடராக இது மாறியுள்ளதாக ஐ.நா. அமைப்புகள் எச்சரித்துள்ளன.

# மதுப்பிரியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி!




சென்னை, ஜூலை. 17–

தமிழக டாஸ்மாக் கடை களில் விற்பனை செய்ய ப்படும் மது வகைகளின் எண்ணிக்கையை அதி கரிக்கும் வகையில், பிற மாநிலங்களில் இருந்து 54 புதிய உயர்தர மது பிராண்டுகளை அறிமுகப்படுத்த டாஸ்மாக் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. தற்போது சுமார் 100 பிராண்டுகள் விற்பனையில் உள்ள நிலையில், நுகர்வோரின் விருப்பத்தை கருத்தில் கொண்டு புதிய பிராண்டுகளுக்கு அனுமதி வழங்கும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இறுதி ஒப்புதல் பட்டியல் விரைவில் வெளியாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# புரி ஜெகந்நாதர் ரத யாத்திரையில் கூட்ட நெரிசல்: ஒருவர் உயிரிழப்பு; 200 பேர் காயம்!



புரி (ஒடிசா), ஜூலை. 17–

ஒடிசாவின் புரியில் நடைபெற்ற உலகப் புகழ்பெற்ற ஜெகந்நாதர் ரத யாத்திரையின்போது ஏற்பட்ட கடும் கூட்ட நெரிசலில் ஒருவர் உயிரிழந்தார்.

மேலும் சுமார் 200 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். லட்சக்கணக்கான பக்தர்கள் ரத யாத்திரையில் பங்கேற்ற நிலையில், தெய்வங்களின் ‘பஹாண்டி’ ஊர்வலத்தின் போது கூட்டம் ஒரே இடத்தில் திரண்டதால் திடீர் நெரிசல் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்புப் படையினர் மற்றும் மருத்துவக் குழுவினர் உடனடியாக மீட்பு பணியில் ஈடுபட்டு காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அனுப்பினர்.

இந்த சம்பவம் குறித்து ஒடிசா அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நடைபெறாமல் இருக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பவுர்ணமி கிரிவலம்: ஜூலை 29-ல் சிறப்பு ரெயில்!




சென்னை, ஜூலை. 17–

திருவண்ணாமலையில் நடைபெறும் பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக ஜூலை 29–ஆம் தேதி விழுப்புரம் திருவண்ணாமலை மற்றும் திருவண்ணாமலைவிழுப்புரம் இடையே 8 பெட்டிகள் கொண்ட முன்பதிவில்லா சிறப்பு மெமு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. விழுப்புரத்தில் இருந்து காலை 10.10 மணிக்குபுறப்படும் ரெயில் 11.45 மணிக்கு திருவண்ணாமலையை சென்றடையும். மறுமார்க்கத்தில் 12.40 மணிக்கு புறப்படும் ரெயில் 2.15 மணிக்கு விழுப்புரம் வந்தடையும். இந்த ரெயில்கள் வெங்கடேசபுரம், மாம்பழப்பட்டு, ஆயந்தூர், திருக்கோவிலூர், ஆதிச்சனூர், அண்டம்பள்ளம் மற்றும் தண்டரை நிலையங்களில் நின்று செல்லும் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

# தேசிய முக்குலத்தோர் கழகத் தலைவர் சுரேஷ் தேவர் அதிமுக மு.அமைச்சர் பொள்ளாச்சி ஜெயராமனை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்!



கோவை, ஜூலை. 17–

அதிமுக கோவை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களை தேசிய முக்குலத்தோர் கழகம் நிறுவனத் தலைவர் டெல்டா டி.சுரேஷ் தென்னம் பிரியர் அவர்கள் பொள்ளாச்சியில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார் உடன் மாநில ஒருங்கிணைப்பாளர் .சின்னசாமி மாநில அமைப்பு செயலாளர் .விஜய கண்ணன் மாநில செயலாளர் தனசேகர் மாநில வியாபாரிகள் சங்க செயலாளர் பொள்ளாச்சி அபிராம் பிரசாத் இளைஞரணி மாநில பொதுசெயலாளர் . ஜனா மாநில தொழிற்சங்க செயலாளர் ராஜாங்கம் அவர்கள் கலந்து கொண்டனர்.

# NEET (UG) 2026 முடிவுகள் வெளியீடு!

புதுடெல்லி, ஜூலை. 17–

NEET (UG) 2026 மறுதேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை (NTA) வெளியிட்டது.

11.21 லட்சம் மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஆர்யன் குப்தா மற்றும் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த பன்ஷுல் பன்சால் தலா 715/720 மதிப்பெண்கள் பெற்று தேசிய அளவில் முதலிடம் பிடித்துள்ளனர். 19 மாணவர்கள் 700–க்கும் மேல், 1,492 பேர் 650–க்கும் மேல், 10,160 பேர் 600–க்கும் மேல் மதிப்பெண் பெற்றுள்ளனர். இயற்பியல் வினாத்தாளில் தவறான ஒரு கேள்வி Dropped செய்யப்பட்டு, அனைத்து மாணவர்களுக்கும் 4 மதிப்பெண்கள் போனஸாக வழங்கப்பட்டன.

மாணவர்கள் தங்கள் மதிப்பெண் அட்டையை neet.nta.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். MCC இணையதளத்தில் மட்டுமே கலந்தாய்வு தகவல்களை அறிய வேண்டும் என NTA அறிவுறுத்தியுள்ளது.

# இண்டிகோ விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்!




பெங்களூரு, ஜூலை. 17–

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இருந்து நேற்று இரவு குஜராத்தின் அகமதாபாத்திற்கு இண்டிகோ விமானம் புறப்பட தயாராக இருந்தது.

அப்போது, விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக எழுதப்பட்ட கடிதத்தை பணியாளர்கள் கண்டுபிடித்தனர். விமானத்தின் கழிவறையில் இருந்த கடிதத்தை பார்த்த பணியாளர்கள் உடனடியாக அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து, விமானத்தில் இருந்த பணிகள் அனைவரும் கீழே இறக்கிவிடப்பட்டனர். பின்னர், விமானம் முழுவதும் பாதுகாப்புப்படையினர் தீவிர சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் விமானத்தில் வெடிகுண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால், வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரியவந்தது.

இதையடுத்து, இண்டிகோ விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது யார்? என்பது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# வாழ்க்கையில் பெரிய வெற்றியைத் தரும் 6 லக்னங்கள்: ஜோதிடம் கூறும் யோககாரக பலன்கள்!




ஜோதிடத்தில் லக்னம் என்பது ஒருவரின் வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சமாக கருதப்படுகிறது. ஒருவர் பிறந்த நேரத்தில் கிழக்கு திசையில் உதயமாகும் ராசியே லக்னம் என அழைக்கப்படுகிறது. ஒருவரின் குணநலன், கல்வி, தொழில், திருமணம், செல்வம், உடல்நலம், குடும்ப வாழ்க்கை மற்றும் எதிர்கால முன்னேற்றம் உள்ளிட்ட பல அம்சங்களை கணிப்பதில் லக்னம் முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுவாக மக்கள் ராசி பலன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தாலும், ஜோதிட நிபுணர்கள் ஜாதகத்தை ஆராயும்போது லக்னத்தையே முதன்மையாகக் கருதுகின்றனர்.

ஜோதிட சாஸ்திரத்தின்படி, ரிஷபம், துலாம், கடகம், சிம்மம், மகரம் மற்றும் கும்பம் ஆகிய ஆறு லக்னங்களில் பிறந்தவர்கள் மற்ற லக்னங்களை விட சிறப்பான யோக பலன்களைப் பெறக்கூடியவர்கள் என்று கூறப்படுகிறது. இதற்குக் காரணம், இந்த லக்னங்களில் சில கிரகங்கள் ஒரே நேரத்தில் கேந்திர ஸ்தானம் மற்றும் திரிகோண ஸ்தானம் ஆகிய இரண்டிற்கும் அதிபதியாக அமைவதே ஆகும். இவ்வாறு செயல்படும் கிரகங்கள் யோககாரக கிரகங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை ஜாதகத்தில் வலிமையாக இருந்தால், வேறு பெரிய ராஜயோக அமைப்புகள் இல்லாவிட்டாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் கிடைக்கும் என்று ஜோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன.

இந்த ஆறு லக்னங்களில், ரிஷபம் மற்றும் துலாம் லக்னங்களுக்கு சனி யோககாரக கிரகமாக திகழ்கிறார். கடகம் மற்றும் சிம்மம் லக்னங்களுக்கு செவ்வாய் யோககாரக கிரகமாகவும், மகரம் மற்றும் கும்பம் லக்னங்களுக்கு சுக்கிரன்யோககாரக கிரகமாகவும் செயல்படுகிறார். இந்த கிரகங்கள் ஜாதகத்தில் உச்சம், சொந்த வீடு அல்லது நல்ல பார்வை பெற்ற நிலையில் இருந்தால், தொழில் வளர்ச்சி, உயர்ந்த பதவி, பொருளாதார முன்னேற்றம், சொத்து சேர்க்கை, வணிக வெற்றி, குடும்ப மகிழ்ச்சி மற்றும் சமூக மரியாதை போன்ற பல நன்மைகள் கிடைக்கும் என்று ஜோதிடர்கள் விளக்குகின்றனர்.

உதாரணமாக, சிம்ம லக்னத்தில் பிறந்த ஒருவருக்கு செவ்வாய் நான்காம் மற்றும் ஒன்பதாம் வீடுகளின் அதிபதியாக இருப்பதால், அவர் ஜாதகத்தில் நல்ல நிலையில் அமைந்திருந்தால் வீடு, நிலம், வாகனம், தொழில் வளர்ச்சி, அதிகாரம் மற்றும் எதிர்பாராத லாபங்கள் கிடைக்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என கூறப்படுகிறது. அதேபோல் மகரம் மற்றும் கும்ப லக்னத்தினருக்கு சுக்கிரன் வலிமையாக இருந்தால் கல்வி, வேலை, செல்வ வளம், வசதியான வாழ்க்கை மற்றும் கலை சார்ந்த துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படும் என்று நம்பப்படுகிறது. ரிஷபம் மற்றும் துலாம் லக்னத்தினருக்கு சனி சாதகமாக இருந்தால் நீண்டகால முயற்சிகளுக்கு வெற்றி, நிலையான வருமானம் மற்றும் உயர்ந்த பொறுப்புகள் கிடைக்கும் என ஜோதிட நூல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், லக்னம் மட்டும் ஒருவரின் வாழ்க்கையை முழுமையாக தீர்மானிக்காது. கிரகங்களின் நிலை, தசாபுத்தி, நட்சத்திரம், பார்வை, யோகங்கள் மற்றும் பிற ஜாதக அமைப்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஆராய்ந்த பிறகே துல்லியமான பலன்களை கூற முடியும். எனவே, இந்த ஆறு லக்னங்களும் இயல்பாகவே யோககாரக கிரகங்களின் ஆதரவைப் பெறும் சிறப்பு கொண்டவை என்றாலும், ஒவ்வொருவரின் வாழ்க்கை பலன்களும் அவரவர் முழு ஜாதக அமைப்பைப் பொறுத்தே அமையும். இந்த தகவல்கள் பாரம்பரிய ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

# பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா!



ஆண்டிபட்டி, ஜூலை 17–

பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தி லிட்டில் ஃப்ளவர் பள்ளியின் சார்பாக விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பள்ளித் தாளாளர் திரு. ஹென்றி அருளானந்தம் அவர்கள் பேரணிக்கு தலைமை தாங்கினார். பேரணியைப் பள்ளிச் செயலர் தமயந்தி ஹென்றி அருளானந்தம் பச்சைக்கொடி அசைத்து துவங்கி வைத்தார். பேருந்து நிலையம் அருகில் பள்ளி மாணவர்கள் காமராஜரைப் பற்றி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேசினர். ஆண்டிபட்டி சப். இன்ஸ்பெக்டர் இரஞ்சித் காமராஜரின் நற்பண்புகளை எடுத்துரைத்தார். பள்ளிச் செயலாளர் மேத்யூ ஜோயல் காவல்துறை அதிகாரிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பள்ளி மாணவர்கள் காமராஜரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்தனர். பள்ளி ஆசிரியர்கள், விழா கமிட்டியினர்,விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.




## தூக்கம் வராமல் தவிக்கிறீர்களா? இதை கவனியுங்கள்!



நல்ல உடல்நலத்திற்கும் மனநலத்திற்கும் தரமான தூக்கம் மிகவும் அவசியம். ஆனால், பலருக்கு இரவில் தூக்கம் வராமல் தவிப்பது அல்லது காலையில் சோர்வாக எழுவது போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு மன அழுத்தம் மட்டுமல்ல, படுக்கையறையின் சூழலும் முக்கிய காரணமாக இருக்கலாம்.

படுக்கையறையில் தேவைக்கு அதிகமான அலங்காரப் பொருட்கள், செயற்கை மலர்கள், பெரிய ஓவியங்கள், வண்ண விளக்குகள் போன்றவற்றை வைப்பது அறையை நெரிசலாக மாற்றும். அதேபோல், குவிந்து கிடக்கும் துணிகள், உடைந்த பொருட்கள், தேவையற்ற பெட்டிகள் ஆகியவை மன அமைதியை பாதிக்கக்கூடும். சுத்தமாகவும், விசாலமாகவும் இருக்கும் அறை விரைவில் தூங்க உதவுகிறது.

தூங்குவதற்கு முன் மொபைல், லேப்டாப், டேப்லெட், டிவி போன்ற மின்னணு சாதனங்களை அதிக நேரம் பயன்படுத்துவது தூக்கத்தின் தரத்தை குறைக்கிறது. இவற்றிலிருந்து வெளிப்படும் நீல ஒளி (Blue Light), உடலில் மெலட்டோனின் ஹார்மோன் சுரப்பை பாதித்து தூக்கத்தை தாமதப்படுத்துகிறது. எனவே, தூங்குவதற்கு குறைந்தது 30 நிமிடங்களுக்கு முன்பே இந்த சாதனங்களை பயன்படுத்துவதை நிறுத்துவது நல்லது.

படுக்கையறையை அலுவலகமாக மாற்றுவதையும் தவிர்க்க வேண்டும். வேலை தொடர்பான கோப்புகள், மடிக்கணினி போன்றவற்றை அங்கு வைத்திருப்பது மனதில் வேலை சிந்தனையை தொடரச் செய்யும். படுக்கையில் வேலை செய்வது, உணவு சாப்பிடுவது, நீண்ட நேரம் சமூக வலைதளங்களில் இருப்பது போன்ற பழக்கங்களும் தூக்கத்தை பாதிக்கின்றன.

அறையின் வெளிச்சமும் வெப்பநிலையும் சரியாக இருக்க வேண்டும். அதிக பிரகாசமான விளக்குகளுக்குப் பதிலாக மென்மையான ஒளியைப் பயன்படுத்துவது நல்லது. மேலும், அறை அதிக வெப்பமாகவோ அல்லது அதிக குளிராகவோ இல்லாமல் இருக்க வேண்டும். பகலில் இயற்கை காற்றும் வெளிச்சமும் உள்ளே வர ஜன்னல்களைத் திறந்து வைப்பதும், இரவில் வெளிச்சத்தைத் தடுக்கும் திரைகளைப் பயன்படுத்துவதும் நல்ல தூக்கத்திற்கு உதவும்.

**முக்கிய குறிப்புகள்:**


படுக்கையறையை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருங்கள்.

தேவையற்ற பொருட்களை அகற்றுங்கள்.

தூங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன் மொபைல், லேப்டாப் பயன்பாட்டை நிறுத்துங்கள்.

படுக்கையறையில் வேலை செய்வதைத் தவிர்க்குங்கள்.

மென்மையான வெளிச்சம் மற்றும் சீரான வெப்பநிலையை பராமரியுங்கள்.



## சினிமா துளிகள்..!

## சினிமா அப்டேட் ..!

**கோலிவுட்:** நடிகர் விஜயின் 'ஜனநாயகன்' திரைப்படம் ஜூலை 23–ம் தேதி வெளியாகவுள்ள நிலையில், பெங்களூருவில் முன்பதிவு தொடங்கியதும் ரசிகர்கள் அதிகாலை முதல் காட்சிக்கான டிக்கெட்டுகளை ஆர்வமுடன் முன்பதிவு செய்து வருகின்றனர். இதற்கிடையில், ஜி.வி. பிரகாஷ் நடித்த 'இம்மார்டல்' திரைப்படத்தின் வெளியீடு செப்டம்பர் 4–க்கு மாற்றப்பட்டுள்ளது.

**பாலிவுட்:** இந்த வாரம் திரையரங்குகள் மற்றும் ஒடிடி தளங்களில் பல புதிய படங்கள் வெளியாகியுள்ளன. பல மொழிப் படங்களுடன் புதிய வெப் சீரிஸ்களும் வெளியாகி ரசிகர்களின் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

**ஹாலிவுட்:** இயக்குநர் கிறிஸ்டோபர் நோலனின் பிரம்மாண்ட திரைப்படமான 'The Odyssey' இந்த வாரத்தின் முக்கிய ஹாலிவுட் வெளியீடாக உலகம் முழுவதும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

## முன்கூட்டியே தொடங்கும் பிக் பாஸ் தமிழ் சீசன் 10




பிக் பாஸ் தமிழ் சீசன் 10 வரும் செப்டம்பர் 6 முதல் விஜய் டிவியில் ஒளிபரப்பாக உள்ளது. வழக்கமாக அக்டோபரில் தொடங்கிய நிகழ்ச்சி, இந்த ஆண்டு ஒரு மாதம் முன்னதாக தொடங்குகிறது. மொத்தம் 105 நாட்கள் நடைபெறும் இந்த சீசனை, கடந்த ஆண்டைப் போலவே விஜய் சேதுபதி தொகுத்து வழங்குகிறார். போட்டியாளர்கள் தேர்வு பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# நான் தோற்க சீனாதான் காரணம் - டிரம்ப்!




வாஷிங்டன், ஜூலை. 17–

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், 2020–ம் ஆண்டு நடந்த அமெரிக்கத் தேர்தலில் சீனா தலையிட்டதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார். அமெரிக்காவில் விரைவில் நடக்க இருக்கும் இடைத்தேர்தல் குறித்து ஜனாதிபதி டிரம்ப் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் 25 நிமிட உரையை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது:– 2020 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், தன்னை தோற்கடிக்க சீனா பல்வேறு சதித்திட்டங்களில் ஈடுபட்டது.

அமெரிக்காவின் 22 கோடி வாக்காளர்களின் விவரங்களை சீனா விலை கொடுத்து சட்டவிரோதமாகப் பெற்று தனக்கு எதிராக எதிர்மறையான செய்திகளை எழுத, அமெரிக்க பத்திரிகையாளர்களுக்கு பெருமளவில் பணம் கொடுத்தது. நவம்பரில் நடக்கவிருக்கும் இடைத்தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடைமுறையின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். மேலும், புதிய வாக்காளர் அடையாள அட்டை மசோதாவை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# யு.பி.ஐ. மூலம் மேற்கொள்ளப்படும் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளுக்கு புதிய கட்டணம்?



புதுடெல்லி, ஜூலை. 17–

இந்தியாவில் பெட்டிக்கடை முதல் பெரிய ஷாப்பிங் மால்கள் வரை அனைத்து வணிக நிறுவனங்களிலும் யு.பி.ஐ. பரிவர்த்தனைகள் நடந்து வருகிறது. தேசிய கொடுப்பனவு அமைப்பால் கடந்த 2016–ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த யு.பி.ஐ. தொழில்நுட்பம், இன்று இந்திய மக்களின் அன்றாட வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக மாறிவிட்டது. எந்தவொரு கூடுதல் கட்டணமும் இன்றி, 24 மணி நேரமும், ஒரே நொடியில் ஒரு வங்கி கணக்கிலிருந்து மற்றொரு வங்கி கணக்கிற்குப் பணத்தை நேரடியாக அனுப்ப முடியும். உள்நாட்டை கடந்து சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ் போன்ற பல நாடுகள் இந்தியாவின் இந்த யு.பி.ஐ. கட்டண முறையைத் தங்களின் நாடுகளிலும் அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

தற்போது இந்தியாவில் கூகுள் பே, போன்பே, பேடிஎம் போன்ற யு.பி.ஐ. செயலிகள் மூலம் நடக்கும் பணப் பரிவர்த்தனைகளுக்கு, 5 முதல் 7 அடிப்படை புள்ளிகள் வரை புதிய கட்டணம் வசூலிக்க மத்திய அரசு ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய கொடுப்பனவு கழகம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளபடி, இந்த புதிய வணிகர் கட்டணம் 0.05 சதவீதம் முதல் 0.07 சதவீதம் வரை விதிக்கப்படவுள்ளது. உதாரணமாக, ஒரு கடையில் ரூ.10 ஆயிரம் மதிப்பிலான வர்த்தகம் நடந்தால், அதற்கு அதிகபட்சமாக ரூ.5 முதல் ரூ.7 வரை கட்டணம் வசூலிக்கப்பட வாய்ப்புள்ளது.

இந்த புதிய கட்டண முறை சாதாரண பொதுமக்களுக்கோ அல்லது ஒரு தனிநபர் மற்றொரு தனிநபருக்கு அனுப்பும் பணப் பரிவர்த்தனைகளுக்கோ முற்றிலும் பொருந்தாது. இது கடைகளில் உள்ள கியூ.ஆர். கோடு மூலம் நடக்கும் பெரிய அளவிலான வணிகப் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே விதிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் யு.பி.ஐ. பரிவர்த்தனைகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பச் செலவுகளை வங்கிகளும், கூகுள் பே, போன்பே போன்ற நிறுவனங்களுமே ஏற்றுக்கொள்கின்றன. டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை உள்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தவும், வங்கிகளின் பராமரிப்புச் செலவுகளைச் சரி செய்யவும், இந்த மிகக் குறைந்த கட்டண முறையைக் கொண்டு வர நிதி அமைச்சகம் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. விரைவில் இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அறநிலையத்துறை அதிகாரிகளிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை!



திண்டுக்கல், ஜூலை. 17–

பழனி கோவில் அலுவலகம் சென்று, நிலம் தொடர்பான ஆவணங்கள், பதிவு செய்த விவரங்கள், கோவில் அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர். மேலும் பழனியில் உள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகத்துக்கு சென்று, தண்டபாணி சுவாமி மடம் தொடர்பாக ஏற்கனவே பதிவான ஆவணங்களை சேகரித்தனர். பழனியில் ரூ.100 கோடி நிலம் முறைகேடாக பதிவு செய்த வழக்கில் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் விசாரணையை தொடங்கியது பழனியில் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் திண்டுக்கல் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் நிலம் முறைகேடு வழக்கு தொடர்ந்த முருகானந்தம் உள்பட அறநிலையத்துறை அதிகாரிகளிடம் சி.பி.சி.ஐ.டி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சஜிதா விசாரணை நடத்தி வருகிறார்.

மேலும் வருவாய்த்துறை மற்றும் பத்திர பதிவுத்துறை அதிகாரி களிடமும் விசாரணை நடைபெற்று வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'பாராசிட்டமால் சிரப்' விவகாரத்தில் தவறான தகவலை பரப்பவேண்டாம்: சுகாதாரத்துறை!



சென்னை, ஜூலை. 17–

குழந்தைகளுக்கு காய்ச்சல், சளி பாதிப்பு ஏற்பட்டால் டாக்டர்கள் 'பாராசிட்டமால் சிரப்' வகைகளை பரிந்துரைப்பார்கள். இந்தநிலையில், குழந்தைகளுக்கு வழங்கப்படும் இந்த சிரப்பில் ஆல்கஹால் விதிகளை மீறி அதிகமான அளவு சேர்க்கப்படுவதாக சமூக வலைதளங்களில் கருத்துகள் பரவி வந்தன. இதுகுறித்து, பொது சுகாதாரத்துறை விளக்கம் தெரிவித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:–


'பாராசிட்டமால் சிரப்' மருந்தானது தமிழ்நாடு மருத்துவப் சேவை கழகத்தின் (டி.என்.எம்.எஸ்.சி.) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தால் பரிசோதிக்கப்பட்டு தரமானது என உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு ஆய்வகமும் இதனை தரமானது என்று சான்றளித்துள்ளது.

குழந்தைகளுக்கான மருந்துகளில் ஆல்கஹால் சரியான விகிதத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. 'பாராசிட்டமால்' மருந்தை எளிதில் கரைக்க ஆல்கஹால் பயன்படுத்துவது வழக்கம்.

**95 சதவீதம்**

இந்த ஆல்கஹாலின் அளவு 10 சதவீதம் என்ற வரம்புக்குள்தான் இருக்கும். உதாரணத்திற்கு, 60 மி.லி. அளவு கொண்ட மருந்து பாட்டிலில் 10 சதவீதம் அதாவது 6 மி.லி. அளவிலேயே ஆல்கஹால் பயன்பாடு இருக்கும். '95 சதவீதம் ஆல்கஹால்' என்பது ஆல்கஹாலின் தூய தன்மையை குறிப்பிடும் சொல் மட்டுமே. தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் கிடங்குகளில் அனைத்து மருந்துகளும் 180 நாட்களுக்கு ஒருமுறை வழக்கமான மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இது தவிர அரசு மருத்துவ நிறுவனங்களில் உள்ள மருந்துகளும் தரத்தை உறுதி செய்ய அவ்வப்போது கள ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. தரமான மருந்து என்று உறுதி செய்யப்பட்ட பிறகே இந்த மருந்துகள் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வினியோகிக்கப்படுகின்றன. எனவே, மக்களிடையே தவறான தகவலை பரப்ப வேண்டாம் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இஸ்ரோ விஞ்ஞானிகள் ராஜினாமா செய்வதற்கு கட்டுப்பாடு !




புதுடெல்லி, ஜூலை. 17–

கடந்த சில மாதங்களில் இஸ்ரோ விஞ்ஞானிகள் சுமார் 100 முதல் 120 பேர் வரை ராஜினாமா செய்ததாக தகவல்கள் வெளியாகின. குறிப்பாக இந்தியாவின் தற்போதைய சந்திரயான்–3, ககன்யான் போன்ற முக்கிய திட்டங்களில் பணியாற்றிய சில மூத்த விஞ்ஞானிகளும் ராஜினாமா செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. இதனையடுத்து இஸ்ரோ விஞ்ஞானிகள் ராஜினாமா செய்வதில் சில கட்டுப்பாடுகளை விதித்து அதனை அவசர நடவடிக்கையாக விண்வெளித்துறை சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அதில் ககன்யான் மற்றும் நாட்டின் பிற முக்கிய விண்வெளி திட்டங்களில் பணியாற்றும் 'குரூப் ஏ' அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் ராஜினாமா அல்லது விருப்ப ஓய்வு விண்ணப்பங்களை இனி வழக்கமான ஒன்றாக கருதி உடனடியாக ஏற்றுக்கொள்ள கூடாது. அதனை கடுமையான பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

முக்கியத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள், தங்களது பொறுப்பில் உள்ள திட்டங்கள் அல்லது பணிகள் முழுமையாக முடிவடையும் வரை பணியில் நீடிக்கவேண்டும். அதுவரை அவர்களது ராஜினாமா விண்ணப்பங்களை மைய இயக்குனர்கள் அங்கீகரிக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு 2020 நவம்பர் 25–ந்தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, 'குரூப் ஏ' அதிகாரிகளின் ராஜினாமாவை அந்தந்த இஸ்ரோ மையங்களின் இயக்குனர்களே நேரடியாக ஏற்று ஒப்புதல் அளிக்க அதிகாரம் இருந்தது. புதிய சுற்றறிக்கை அதனை ரத்து செய்து, விண்ணப்பங்களை இயக்குனர்களின் பரிந்துரைகளுடன் டெல்லியில் உள்ள விண்வெளித்துறையின் (டி.ஓ.எஸ்.) இறுதி முடிவுக்காக மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும்.

இஸ்ரோவின் மூத்த விஞ்ஞானிகள் தனியார் விண்வெளி நிறுவனங்களின் ஈர்ப்பால் பணியில் இருந்து விலகுவதாக கூறப்படும் நிலையில், இந்த சுற்றறிக்கை மூலம் இஸ்ரோ விஞ்ஞானிகள் தங்களுக்குப் பிடித்த நேரத்தில் உடனே பணியைவிட்டு வெளியேற முடியாதபடி, இறுதி முடிவு எடுக்கும் அதிகாரத்தை இஸ்ரோவிடமிருந்து விண்வெளித்துறை (அரசாங்கம்) நேரடியாக தன் கைக்கு மாற்றியிருக்கிறது.

இஸ்ரோ உலக நாடுகளுக்குப் போட்டியாக விண்வெளிப் பொருளாதாரத்தில் அசுர வளர்ச்சி அடைந்துவரும் சூழலில், அதன் தொழில்நுட்பமும், விஞ்ஞானிகளும் உலக அளவில் மதிக்கப்படுகிறார்கள். அந்த அரிய மனித வளத்தைக் காப்பதற்காகவே அரசாங்கம் தற்போது இந்த புதிய கட்டுப்பாட்டு விதியை கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வேலை வாய்ப்பு

## RRB ரயில்வே ஆட்சேர்ப்பு 2026– காலிப்பணியிடங்கள்: 119




நிறுவனத்தின் பெயர்: ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB)
அறிவிப்பு எண்: CEN 03/2026
பணியமர்த்தும் முறை: நிரந்தர பணி (Regular Basis)
பணியிடத்தின் பெயர்: செக்ஷன் கண்ட்ரோலர் (Section Controller)
காலிப்பணியிடங்கள்: 119
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 15.07.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 14.08.2026 இரவு 11.59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் : https://www.rrbchennai.gov.in/
அதிகாரப்பூர்வ இணையதளம்: RRB Chennai

## ஏர் ஃபோர்ஸ் பள்ளியில் ஆசிரியர் வேலைவாய்ப்பு! மாதம் ரூ.33,000 சம்பளம்

கோயம்புத்தூர் மாவட்டம் சூலூரில் உள்ள ஏர் ஃபோர்ஸ் பள்ளியில் (Air Force School Sulur) கணிதப் பாட ஆசிரியர் (TGT Maths) ஒப்பந்த அடிப்படையில் 1 காலிப்பணியிடத்தை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**முக்கிய விவரங்கள்:**

பணி: TGT Maths (கணித ஆசிரியர்)
காலியிடம்: 1
சம்பளம்: மாதம் ரூ.33,000 (EPF வசதி உண்டு)
நேர்முகத் தேர்வு: 22 ஜூலை 2026, காலை 8.00 மணி
இடம்: Air Force School, Sulur

**கல்வித் தகுதி:**

M.Sc./B.Sc. (கணிதம்) Physics / Chemistry / Electronics / Computer Science / Statistics ஆகியவற்றில் ஏதேனும் இரண்டு பாடங்களுடன்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் 50% மதிப்பெண்கள் அவசியம்.

B.Ed. பட்டம் கட்டாயம்.

**வயது வரம்பு:**

01.07.2026 நிலவரப்படி 21 முதல் 50 வயது வரை.

**தேவையான திறன்கள்:**

தமிழ், இந்தி மற்றும் ஆங்கிலத்தில் வாசிக்க, எழுத மற்றும் சரளமாக பேசும் திறன் விரும்பத்தக்கது.

**எடுத்து வர வேண்டிய ஆவணங்கள்:**

பயோடேட்டா
கல்விச் சான்றிதழ்களின் அசல் நகல்கள்
பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
அனுபவச் சான்றிதழ் (இருந்தால்)
மேலும் தகவலுக்கு:
பள்ளி அலுவலகம்: 8870626124
அலுவலக நேரம்: காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை.

# தொடர் சரிவில் தங்கம்!



சென்னை, ஜூலை. 17–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ரூ.1,04, 800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 குறைந்து ரூ.13,100–க்கு விற்பனை செய்யப்படுகிறது.


தங்கத்தை போல வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.235–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# இனி வந்தே மாதரம் பாடலை அவமதித்தால்... மத்திய அரசு கொண்டு வரும் புதிய மசோதா!

புதுடெல்லி, ஜூலை. 17–

'வந்தே மாதரம்' பாடலை அவமதிப்பதை இனி தண்டனைக்குரிய குற்றமாக்க, வரும் மழைக்கால கூட்டத்தொடரில் மத்திய அரசு புதிய மசோதாவினை கொண்டு வருகிறது.

**வந்தே மாதரம்**

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வருகிற 20–ந் தேதி தொடங்கி அடுத்த மாதம் (ஆகஸ்டு) 13–ந் தேதி வரை நடைபெறுகிறது. முன்னதாக நாடு முழுவதும் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் அரசு விழாக்களில் தேசிய பாடலான 'வந்தே மாதரம்' முழுமையாக பாடப்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. அதற்கான வழிகாட்டுதலையும் வெளியிட்டது.

தண்டனைக்குரிய குற்றம்

அதன்படி, அரசு விழாக்களில் மாநில பாடல்களை முதலில் பாடலாம். அதன்பின் தேசியப் பாடலும் (வந்தே மாதரம்), அதையடுத்து தேசிய கீதமும் (ஜன கன மன) கட்டாயம் பாடப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்த நிலையில், வந்தே மாதரம் பாடலுக்கு தடங்கல் ஏற்படுத்துவது அல்லது அவமதிப்பு செய்வதை தண்டனைக்குரிய குற்றமாக்கும் வகையில், 'தேசிய கவுரவத்துக்கு அவமதிப்பு ஏற்படுத்துவதை தடுக்கும் சட்டத் திருத்த மசோதா 2026–ஐ, வரும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் அறிமுகம் செய்து, நிறைவேற்ற மத்திய



அரசு திட்டமிட்டுள்ளது.

**புதிய மசோதா**

இதுதொடர்பாக மக்களவை செயலகம் வெளியிட்ட நாடாளுமன்ற அலுவல் குறிப்பில், இந்த மசோதா அறிமுகமும் பட்டியலிடப்பட்டுள்ளது. தேசிய கவுரவத்துக்கு அவமதிப்பு ஏற்படுத்துவதைத் தடுக்கும் சட்டம் 1971–ல் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது.

பிறப்பு–இறப்பு பதிவு திருத்த சட்ட மசோதா

மேலும், பிறப்பு மற்றும் இறப்புகளை தாமதமாகப் பதிவு செய்வதற்கான விதிகளை மேலும் கடுமையாக்கும் வகையில், பிறப்பு – இறப்பு பதிவு சட்டம் 1969–இன் பிரிவு 13(3)–இல் கடந்த 2023–இல் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தத்தில் மீண்டும் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் 'பிறப்பு–இறப்பு பதிவு திருத்த சட்ட மசோதா 2026' மழைக்கால கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

# ரூ.1.10 கோடியில் புதுப்பொலிவு பெறும் 11 அம்மா உணவகங்கள்!

சேலம், ஜூலை. 17–

தமிழகம் முழுவதும் உள்ள அம்மா உணவகங்களை புதுப்பித்து மக்களுக்கு சுவையான, தரமான உணவு வகைகளை வழங்க வேண்டும் என முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, சேலம் மாநகராட்சி பகுதியில் உள்ள 11 அம்மா உணவகங்களின் உள்கட்டமைப்புகளை சீரமைக்க ரூ.1 கோடியே 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




இந்த நிதியை வைத்து அனைத்து அம்மா உணவகங்களிலும் வர்ணம் பூசுதல் (பெயிண்டு அடித்தல்), பழுதடைந்த மின்விசிறிகளை மாற்றி புதிய மின்விசிறிகள் மாட்டுதல், தேவையான அம்மா உணவகங்களில் குடிநீர் சுத்திகரிப்பு எந்திரம் வைத்தல், புதிய சமையல் உபகரணங்களை வாங்குதல் உள்ளிட்ட பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இதனால் கடந்த 10 ஆண்டுகளாக சீரமைக்கப்படாமல் உள்ள அம்மா உணவகங்கள் தற்போது புதுப்பொலிவு பெறுகிறது.

குறிப்பாக மணியனூர் பகுதியில் உள்ள அம்மா உணவகத்திற்கு ரூ.20½ லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் அறைகள் கட்டுவதோடு தேவையான சமையல் பாத்திரங்கள் கொள்முதல் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், சூரமங்கலம் உழவர் சந்தை அருகில் அமைந்துள்ள அம்மா உணவகத்திலும் ரூ.20 லட்சத்தில் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட உள்ளது. அதேசமயம் அம்மா உணவகங்களுக்கு வழங்கப்படும் பருப்பு, அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள் ஆகியவற்றை குறிப்பிட்ட அளவு மட்டும் வழங்குவதாகவும், இதனால் உணவு தரமான முறையில் தயாரித்து வழங்க முடியாத சிரமம் உள்ளதாகவும் அம்மா உணவகத்தில் வேலை செய்து வரும் பெண்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர். ஏழை, எளிய மக்களின் பசியை போக்கும் அம்மா உணவகங்களுக்கு தேவையான அளவு பொருட்கள் வழங்குவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று அம்மா உணவகங்களுக்கு சாப்பிட வந்துசெல்லும் பொது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# இஸ்ரேல் நாடாளுமன்றம் கலைப்பு!

ஜெருசலேம், ஜூலை. 17–

இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் பதவி காலம் 4 ஆண்டுகள் ஆகும். இஸ்ரேலில் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. அந்நாட்டின் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, இஸ்ரேல் நாடாளுமன்ற 4 ஆண்டுகள் பதவி காலத்தை நிறைவு செய்ய உள்ளது. இதையடுத்து, இஸ்ரேல் நாளுமன்ற தேர்தல் அக்டோபர் 27ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் நாடாளுமன்றம் இன்று கலைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் கடைசி கூட்டத்தொடர் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தொடரில் ஏராளமான மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. இதையடுத்து, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் அக்டோபர் 27ம் தேதி தேர்தல் நடைபெற்றப்பின் நாடாளுமன்றம் புதிய அரசின் தலைமையில் கூட உள்ளது. நாடாளுமன்ற தேர்தலில் 120 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இந்த தேர்தலில் பெஞ்சமின் நெதன்யாகு, நப்தலி பென்னெட் உள்ளிட்டோர் போட்டியிட உள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

# தமிழ்நாட்டில் பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க புதிய செயல் திட்டம்!



சென்னை, ஜூலை. 17–

தமிழ்நாட்டில் பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க புதிய செயல் திட்டமிடப்பட்டுள்ளது. Women's Quality Employment Plan ( WQEP) என்ற செயல் திட்டத்தை உருவாக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்த ஆலோசனை நிறுவனத்தை தேர்வு செய்ய அரசு ஒப்பந்தம் கோரியது. மாவட்ட வாரியாக எந்தெந்த துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதை கண்டறிய முடிவு செய்துள்ளது.

# கோவை மாநகராட்சியில் காங்கிரஸ் - திமுக அடிதடி!

கோவை, ஜூலை. 17–

கோவை மாநகராட்சியில் காங்கிரஸ் – திமுக கவுன்சிலர்கள் அடிதடியில் ஈடுபட்டனர். இதையடுத்து கவுன்சிலர்கள் 5 பேரை சஸ்பெண்ட் செய்து மேயர் உத்தரவிட்டார்.

கோவை மாநகராட்சி கூட்டம் கூடியது. கூட்டம் துவங்கியவுடன், செம்மொழி பூங்கா ஊழல் பற்றி பேச காங்., கவுன்சிலர் காயத்ரி முயற்சி செய்தார். மேயர் ரங்கநாயகியை முற்றுகையிடவும் முயற்சித்தார்.



அவருக்கு மேயரும், திமுக கவுன்சிலர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர்.இதனால் தி.மு.க.,– காங்கிரஸ் கவுன்சிலர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. பெண் கவுன்சிலர்கள் ஒருவருக்கொருவர் ஆவேசமாக மோதிக் கொண்டதால் அந்த இடமே போர்க்களம் போல காட்சியளித்தது. கூச்சல், குழப்பம் நிலவியது. இதையடுத்து காங்., கவுன்சிலர் காயத்ரி, கம்யூ., கவுன்சிலர்கள் ராமமூர்த்தி, பூபதி, பிரபா, சாந்தி ஆகிய 5 பேரை 2 மாதம் சஸ்பெண்ட் செய்வதாக மேயர் அறிவித்தார்.

# ECR உயர்மட்ட சாலைத் திட்டம்: செலவை குறைக்க தொழில்நுட்பக் குழு அமைப்பு!

சென்னை, ஜூலை. 17–

சென்னை ஈசிஆர்–ல் திட்டமிடப்பட்ட 13.3 கி.மீ நீளமுடைய 4 வழிச்சாலை உயர்மட்ட பாதை திட்டச் செலவை குறைக்க குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது. திருவான்மியூர்–உத்தண்டி உயர்மட்ட சாலை திட்டச் செலவில் இருந்து 600 கோடி ரூபாய் குறைக்க தொழில்நுட்ப குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் (TNSHA) தொழில்நுட்ப குழு அமைக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஈசிஆர் உயர்மட்ட சாலைக்கு ரூ.2,100 கோடியாக இருந்த திட்ட மதிப்பை ரூ.1500 கோடியாக குறைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தூண் அமைப்பு, அடித்தளம், சாலை அகலம், கட்டுமான பொருள் போன்றவை தேவை க்கு மீறி உள்ளதாக கூறப்படுகிறது. தேவைக்கு அதிகமாக உள்ள விவரக்குறிப்புகளை மாற்றி அமைத்தால் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை செலவு குறைக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

புதிய மாற்றங்களை ஏற்க மறுத்தால் திட்டத்திலிருந்து ஒப்பந்ததாரர் விலகும் வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தவெக பெண் தொண்டர்களை இழிவாக பேசியதாக வழக்கு - பொன்ராஜ் மனு தள்ளுபடி!

சென்னை, ஜூலை. 17–

தவெக பெண் தொண்டர்களை இழிவாகப் ஏசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளை ரத்து செய்யக்கோரி அரசியல் விமர்சகர் பொன்ராஜ் தாக்கல் செய்த மனுவை சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தது.



தவெக தலைவர் விஜய்–க்கு ஆதரவாக பேட்டியளித்த பெண் தொண்டர்களை இழிவாக விமர்சித்ததாக, அரசியல் விமர்சகரும், மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் ஆலோசகருமான பொன்ராஜ்–க்கு எதிராக, கடந்த மார்ச் 26ஆம் தேதி தற்போதைய அமைச்சர்கள் நிர்மல்குமார், ராஜ்குமார் ஆகியோர் அளித்த புகார்களின் அடிப்படையில், மே 12ஆம் தேதி சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசாரும், கடலூர் போலீசாரும் வழக்குகள் பதிவு செய்திருந்தனர். இந்த இரு வழக்குகளையும் ரத்து செய்யக் கோரி பொன்ராஜ் தாக்கல் செய்திருந்த மனுக்களை நீதிபதி ஜி.கே. இளந்திரையன் விசாரித்தார்.

பொன்ராஜ் தரப்பில், யு டியூப் சேனல் பேட்டியில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மட்டுமே மனுதாரர் பதிலளித்தார். மற்றபடி பெண்களுக்கு எதிராக உள்நோக்கத்துடன் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. தற்போது அமைச்சர்களாக உள்ள இருவர், தேர்தலுக்கு முன் அளித்த புகார்கள் மீது புதிய அரசு பொறுப்பேற்ற பின், எந்தவித ஆரம்பகட்ட விசாரணையும் நடத்தாமல் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது.

காவல் துறை தரப்பில், மறைந்த முன்னாள் ஜனாதிபதியின் தனி செயலாளராக பணியாற்றியவர், இதுபோல பேசியிருக்க கூடாது. அவரது பேச்சு ஒட்டுமொத்த பெண்களை குறிக்கும் வகையில் பொதுப்படையாகவே உள்ளது. மனுதாரரின் பேச்சு அடங்கிய வீடியோக்கள், இன்னும் இணையதளத்தில் உள்ளன. வழக்கு முதல் தகவல் அறிக்கை என்ற நிலையில் மட்டுமே உள்ளதால், வழக்கை ரத்து செய்யக் கூடாது என வாதம் முன் வைக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, பொன்ராஜின் மனுக்கள் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தார். இந்தநிலையில், இன்று, இந்த மனுக்கள் மீது தீர்ப்பளித்த நீதிபதி, பொன்ராஜ் தரப்பு வாதங்களை ஏற்க மறுத்து, அவரது மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

# ஜூலை 21-க்குள் கட்சியில் இருந்து வெளியேறிவிடுங்கள் - மம்தா பானர்ஜி ஆவேசம்!

கொல்கத்தா, ஜூலை. 17–

பாஜக, அமலாக்கத்துறை உள்ளிட்டவற்றின் அழுத்தம் காரணமாகவோ, நிலுவையில் உள்ள வழக்குகள் காரணமாகவோ யாராவது கட்சியை விட்டு வெளியேற விரும்பினால், தயவு செய்து ஜூலை 21க்கு முன்பே வெளியேறி விடுங்கள் என பேஸ்புக் லைவில் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.



பேஸ்புக் லைவில் மம்தா பானர்ஜி பேசியதாவது:–

பாஜக, காவல்துறை, அமலாக்கத்துறை, சிபிஐ, சிஐடி உள்ளிட்டவற்றின் அழுத்தம் காரணமாகவோ அல்லது நிலுவையில் உள்ள வழக்குகள் காரணமாகவோ யாராவது கட்சியை விட்டு வெளியேற விரும்பினால், கைகூப்பி வேண்டுகிறேன், தயவு செய்து ஜூலை 21க்கு முன்பே வெளியேறிவிடுங்கள்.

நாம் கட்டியெழுப்பிய கட்சியின் பெயரைக் கெடுக்க வேண்டாம். நீங்கள் தாராளமாக வெளியேறலாம், இதனால் எங்கள் கட்சி பலவீனமடையாது. யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பது முக்கியமல்ல. கட்சியில் நீடிப்பவர்களே எங்களின் உண்மையான பலம். ஜூலை 21க்குப் பிறகு நாங்கள் ஒரு புதிய தொடக்கத்தை ஏற்படுத்துவோம்'' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ''1993, ஜூலை 21, துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த தியாகிகளின் குடும்பத்தினர் கூட மிரட்டப்பட்டு பாஜகவிற்கு அழைத்துச் செல்லப்படுவதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் போகலாம், ஆனால் அவர்களின் இதயம் எப்போதும் நம்முடன்தான் இருக்கும் என்பது எனக்குத் தெரியும் என தெரிவித்துள்ளார்.

# மேற்கு வங்கம்: பள்ளிக் குழந்தைகள் சென்ற வாகனம் மீது ரெயில் மோதி விபத்து!

மேற்கு வங்கம், ஜூலை. 17–

மேற்கு வங்க மாநிலம் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் பள்ளி வாகனம் மீது ரெயில் மோதியதில் 2 குழந்தைகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.



முர்ஷிதாபாத்தில் உள்ள கோவிந்த்பூர் ரெயில்வே கிராசிங்கில், இன்று காலை 7 மணியளவில் பலர் அமரும் காரில் குழந்தைகள் பள்ளி சென்று கொண்டிருந்தனர்.

திறந்திருந்த ரெயில் தண்டவாளத்தை வாகனம் கடக்க முயன்றபோது புறநகர் ரெயில் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்தது. இதில் உயிரிழந்தவர்களில் இரண்டு குழந்தைகள் மற்றும் ஒரு முதியவர் அடங்குவர்.

மேலும் வாகனத்தில் இருந்த மற்ற பல குழந்தைகளும் பலத்த காயமடைந்தனர். ஒரு சைக்கிள் ஓட்டுநரும் மோதப்பட்டு காயமடைந்தார்.

உள்ளூர் மக்கள் உடனடியாக செயல்பட்டு, காயமடைந்த குழந்தைகளையும், நபரையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். காயமடைந்த குழந்தைகள் பெர்ஹாம்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து குறித்த தகவல் கிடைத்ததும், ரெயில்வே காவல்துறையினரும் உள்ளூர் காவல்துறையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

ரெயில்வே கிராசிங்கைக் கடக்கும்போது விபத்து எப்படி நிகழ்ந்தது என்பதை காவல்துறையினர் கண்டறிய முயன்று வருகின்றனர்.

10 பேர் கொண்ட விசாரணை குழு அமைத்து ரெயில்வே டிவிஷனல் மானேஜர் உத்தரவிட்டுள்ளார். அலட்சியமாக செயல்பட்டதாக கேட்மேன் மற்றும் சூப்பர்வைசர் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

பள்ளிக்குழந்தைகள் விபத்தில் சிக்கியுள்ளது பெற்றோர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் இடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020